பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 07 2024 **THURSDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மத்திய பட்ஜெட் தொடர்பான விவாதம் பயனுள்ள வகையில் அமைய வேண்டும் என்று மக்கள் விரும்புவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் நிபா வைரஸால் யாரும் பாதிக்கப்படவில்லை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

3. ஜனநாயக மரபு அடிப்படையில் அடுத்த தலைமுறையினருக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தாம் விலகியதாக அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் கூறியுள்ளார்.

4. ஹமாஸ் அமைப்பினரின் பிடியில் உள்ள இஸ்ரேல் நாட்டவரை விடுவிப்பதற்கான முயற்சிகளை தமது அரசு துரிதப்படுத்தியிருப்பதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ தெரிவித்துள்ளார்.

5. நாட்டின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு மிக கனமழை முதல் அதி கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மத்திய பட்ஜெட் தொடர்பான விவாதம் பயனுள்ள வகையில் அமைய வேண்டும் என்று மக்கள் விரும்புவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் மாண்பை குறைக்கும் வகையில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அவையில் உரையாற்றுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் பணியில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்றும் மத்திய பட்ஜெட் தொடர்பான ஆக்கபூர்வமான விவாதம் நடைபெற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் தங்களது உறுப்பினர்கள் பட்ஜெட் விவாதத்தின்போது இடையூறு விளைவிக்காமல் இருக்குமாறு அறிவுறுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் அரசு முறைப் பயணமாக இன்று லாவோஸ் புறப்பட்டுச் செல்கிறார்.

லாவோசின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான திரு. சலூம்க்சே கொம்மாசித்தின் அழைப்பின் பேரில் திரு ஜெய்சங்கர் அங்கு பயணம் மேற்கொள்கிறார்.

ஆசியான் - இந்தியா கூட்டம், கிழக்கு ஆசிய உச்சிமாநாடு மற்றும் ஆசியான் மண்டலக் கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டங்களில் அவர் பங்கேற்கவுள்ளார்.

இந்த பயணத்தின்போது பல்வேறு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை திரு ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்புப் பேச்சுகள் நடத்தவுள்ளார்.

அதனைத் தொடர்நது அவர், வரும் 28-ம் தேதி ஜப்பான் செல்கிறார்.,

வரும் 29-ம் தேதி டோக்யோவில் நடைபெறும் குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்களுடன் இணைந்து திரு ஜெய்சங்கர் பங்கேற்கிறார்.

மண்டல மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்தும், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்புடன் செயல்படுவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

கேரளாவில் நிபா வைரஸ் தாக்கம் குறித்த அச்சம் நிலவி வரும் நிலையில், தமிழகம் - கேரளா எல்லை மாவட்டங்களில் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவமனைகளுக்கு சென்று பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதாரத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் சுகாதார கண்காணிப்பை மேற்கொள்வதற்கான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாக மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் சென்னை கோடம்பாக்கம் மண்டலத்தில் மழைக்கால நோய்களுக்கான முன்னெச்சரிக்கை மருத்துவ முகாமினை இன்று தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் நிபா வைரஸால் யாரும் பாதிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

(சவுண்ட் பைட — மா. சு 40 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வெ. கணேசன், சென்னையில் உள்ள **ESI** மருந்தகங்களில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மருந்துகளின் இருப்பு குறித்தும், மருத்துவர்கள், பணியாளர்களின் வருகை குறித்தும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**>>>>><<<<<**

மத்திய பட்ஜெட்டில் தங்கத்தின் மீதான இறக்குமதி வரி 6 சதவீதமாக குறைக்கப்படும் என்ற அறிவிப்பு, மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த அறிவிப்பு தங்களது தொழிலை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது என்று திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த நகை தொழிலாளர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

(சவுண்ட்பைட் - தொழிலாளர்கள் 42 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில், தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் நீதிமன்ற காவலை அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நீட்டித்து, தில்லி ரோஸ் அவின்யூ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிபிஐ தொடர்ந்த வழக்கில் இந்த உத்தரவினை அந்த நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இந்த முறைகேடு தொடர்பாக அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கில் இம்மாதம் 12ஆம் தேதி உச்சநீதிமன்றம், திரு. கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்கிய போதும், இது தொடர்பான மற்றொரு வழக்கில் சிபிஐ திரு. கெஜ்ரிவாலை கைது செய்ததால், அவர் திஹார் சிறையில் இருந்து வருகிறார்.

>>>>><<<<<

ஜனநாயகத்தை காக்கும் நோக்கில் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தாம் விலகியதாக அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது இதனை தெரிவித்த அவர், அடுத்த தலைமுறையினருக்கு வாய்ப்பு அளிப்பதற்காக இம்முடிவை எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் திரு. டொனால்டு ட்ரம்பை எதிர்கொள்ள திருமதி. கமலா ஹாரிஸ் தயாராக இருப்பதாக திரு. ஜோ பைடன் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

ஹமாஸ் அமைப்பினரின் பிடியில் உள்ள இஸ்ரேல் நாட்டவரை விடுவிப்பதற்கான முயற்சிகளை தமது அரசு துரிதப்படுத்தியிருப்பதாக இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இஸ்ரேலுடனான அமெரிக்காவின் உறவு மேலும் வலுப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அரபு நாடுகளுடனான இஸ்ரேலின் உறவு வலுப்படும் பட்சத்தில், மேற்கு ஆசியாவில் அவற்றின் செல்வாக்கு அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் காஸாவில் அமைதி நிலவ தமது அரசு பாடுபடும் என்று திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹு இந்த உரையின் போது குறிப்பிட்டார்.

>>>>><<<<<

நாட்டின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு மிக கனமழை முதல் அதி கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத், கோவா, மகாராஷ்ட்ரா, கொங்கன் மண்டலப் பகுதிகளில் நாளை வரை இயல்புக்கு மாறாக அதிக அளவில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

மேலும், கர்நாடகாவின் கடலோரப் பகுதி, ஒடிசா மாநிலத்தின் சில இடங்களில் நாளை வரை மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா, மாஹே, லட்சத்தீவு பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால், ராயலசீமா, ஆந்திரப் பிரதேசத்தின் கடலோரப் பகுதிகளில் ஒரு சில இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, மகாராஷ்ட்ர மாநிலம், புனேயில் மழை வெள்ளத்தால் பல பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

புனே மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ள நிவாரண நடவடிக்கைகளை அம்மாநில துணை முதலமைச்சர் திரு. அஜீத் பவார் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும், தேவையின்றி பொது இடங்களுக்கு செல்ல வேண்டாம் என்றும் திரு. அஜித் பவார் கேட்டுக் கொண்டார்.

அப்பகுதியில் தேசிய மற்றும் பேரிடர் மீட்புப் படையினர் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலிருந்து மக்களை மீட்கும் பணியினை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

கனமழை காரணமாக மும்பையில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி நாளை வெகுவிமரிசையாக நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நாளை நடைபெறும் கோலாகல நிகழ்ச்சியில், பல நாடுகளின் சிறப்பு கலாச்சார பிரதிபலிப்புடன் கலைநிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னதாகவே, தகுதிச் சுற்று ஆட்டங்கள் பல பிரிவுகளில் தொடங்கியுள்ளன.

வில்வித்தைப் பிரிவில் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

இதற்கான தனிநபர் தகுதிச் சுற்றில் இந்தியாவின் தீபிகா குமாரி, அங்கிதா பகத், பஜன் கவுர் ஆகியோர் பங்கேற்கின்றனர். இந்த போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 1 மணிக்கு தொடங்குகிறது.

குழு வில்வித்தைப் பிரிவின் தகுதிச்சுற்று இன்று மாலை 5.45 மணிக்கு நடைபெறுகிறது.

ஆடவர் பிரிவில் தீரஜ், தருண்தீப் ராய், பிரவீன் ஜாதவ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். இப்போட்டி மாலை 5.45 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<